# QB365 Question Bank Software Study Material

## புவியியல் - இந்தியா - மக்கள் தொகை, போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் வணிகம் முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 10ம் வகுப்பு
## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

**2 மதிப்பெண் வினாக்கள்**

15 x 2 = 30

1) இடம்பெயர்வு என்றால் என்ன? அதன் வகைகளைக் குறிப்பிடுக

**பதில் :** 1. இடப்பெயர்வு என்பது ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு மக்கள் இடம் பெயர்ந்து செல்வதாகும்.
2. இது உள்நாட்டு இடப்பெயர்வு (ஒரு நாட்டின் எல்லைக்குள்) மற்றும் சர்வதேச இடப்பெயர்வு (நாடுகளுக்கு இடையே) என இருவகைப்படும்.

2) இரயில் போக்குவரத்தின் நன்மைகள் ஏதேனும் நான்கினை எழுதுக

**பதில் :** **இரயில் போக்குவரத்தின் நன்மைகள்:**
1. இரயில் போக்குவரத்து மிக அதிக அளவிலான பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்தின் தேவையை பூர்த்தி செய்வதன் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கான பங்கினை அளித்து வருகிறது.
2. இது மக்களை ஒன்றிணைப்பதன் மூலம் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கிறது.
3. வணிகம், சுற்றுலா, கல்வி போன்றவற்றையும் ஊக்குவிக்கிறது.
4. மூலப்பொருட்களைத் தொழிற்சாலைக்கும், தயாரிக்கப்பட்ட தொழிலகப் பொருட்களைச் சந்தைகளுக்கும் கொண்டு செல்ல உதவுகிறது.

3) நம் நாட்டின் குழாய் போக்குவரத்து அமைப்பு பற்றி ஒரு குறிப்பு எழுதுக.

**பதில் :** 1. எண்ணொய் மற்றும் இயற்கை எரிவாயு வயல்களையும், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களையும், அதன் சந்தை பகுதிகளோடு இணைப்பதற்கு, எளிதான மற்றும் சிறந்த போக்குவரத்தாக குழாய் போக்குவரத்து செயல்பட்டு வருகிறது.
2. முன்னதாக இவை நகரங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் தண்ணீர் வழங்குவதற்கு பயன்படுத்தப்பட்டது.
3. தற்பொழுது திடப்பொருள்களும் குழம்பாக்குதல் மூலம் குழாய் வழியே கொண்டு செல்லப்படுகிறது.
4. குழாய் போக்குவரத்து அமைப்பதற்கு ஆரம்பகால செலவுகள் அதிகம். ஆனால் இதனை பராமரிப்பதற்கான செலவு மிகவும் குறைவு.
5. இவற்றை கடினமான நிலப்பகுதிகளிலும், நீருக்கு அடியிலும் அமைக்க இயலும். இது தடங்கலற்ற, குறைந்த செலவுடைய, காலதாமதமற்ற மற்றும் ஆவியாதலற்ற போக்குவரத்து ஆகும்.

4) இந்தியாவின் முக்கிய உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்துகளைக் குறிப்பிடுக

**பதில் :** **இந்தியாவின் முக்கிய உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து:**
**தேசிய நீர்வழிப்போக்குவரத்து எண்: 1**
இது ஹால்தியா மற்றும் அலகாபாத் இடையே 1620 கி.மீ நீளத்தைக் கொண்டு, கங்கை - பாகிரதி -ஹுக்ளி ஆறுகளுடன் இணைந்து செயல்படுகிறது.
**தேசிய நீர்வழிப்போக்குவரத்து எண்: 2**
இது பிரம்மபுத்ரா ஆற்றில் துயிரி மற்றும் காடியாவிற்கு இடையே சுமார் 891 கி.மீ நீளத்தைக் கொண்டுள்ளது.
**தேசிய நீர்வழிப்போக்குவரத்து எண்: 3**
இந்த நீர்வழி கேரளா மாநிலத்தின் கொல்லம் மற்றும் கோட்டபுரம் இடையே உள்ளது.
24 மணி நேரமும் செயல்பட்டு 205 கி.மீ தொலைவிற்கு போக்குவரத்து வசதியை அளிக்கக்கூடிய இந்தியாவின் முதல் தேசிய நீர்வழிப் போக்குவரத்து இதுவாகும்.

5) தகவல் தொடர்பு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

**பதில் :** **தகவல் தொடர்பு:**
தகவல்கள், எண்ணங்கள் மற்றும் கருத்துகளின் பரிமாற்றத்தையே தகவல் தொடர்பு என்கிறோம். தகவல் தொடர்புத் துறையில், தொழில்நுட்பம் வியக்கத்தக்க வகையில் உள்ளது.
**வகைகள்:**
i. பொதுத்தகவல் தொடர்பு
ii. தனிமனித தகவல் தொடர்பு

6) பன்னாட்டு வணிகம் – வரையறு.

**பதில் : பன்னாட்டு வணிகம்:**
இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே நடைபெறும் வணிகம், பன்னாட்டு வணிகம் அல்லது அயல்நாட்டு வணிகம் என அழைக்கப்படுகிறது.
**கூறுகள்:**
ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகியவை பன்னாட்டு வணிகத்தின் இரு கூறுகள் ஆகும்.
**வணிகச் சமநிலை:**
ஒரு நாட்டின் ஏற்றுமதி மதிப்பிற்கும், இறக்குமதி மதிப்பிற்கும் இடையேயுள்ள வேறுபாடு வணிகச் சமநிலை எனப்படும்.

7) சாலைப் போக்குவரத்தின் சாதக அம்சங்களை குறிப்பிடுக

**பதில் : சாலைப் போக்குவரத்தின் சாதக அம்சங்கள்:**
1. சாலைவழி, குறுகிய மற்றும் நீண்ட தூரத்திற்கு பயணிகள் மற்றும் சரக்குகளைக் கொண்டு செல்வதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.
2. இது குறுகிய, மத்திய மற்றும் தொலைதூர சேவைகளுக்கு மிகவும் ஏற்றது.
3. இது குறுகிய தூர பயணத்திற்கு மிகவும் உகந்தது ஆகும்.
4. சாலைகளை அமைப்பது மற்றும் பராமரிப்பு செய்வது மற்ற போக்குவரத்து முறைகளை ஒப்பிடும் பொழுது மலிவானதாகும்.
5. சாலைப் போக்குவரத்து அமைப்பு மூலம் பண்ணைகள், தொழிற்சாலைகள் மற்றும் சந்தைகள் ஆகியவற்றிற்கு இடையில் எளிதில் தொடர்பு ஏற்படுகிறது.
6. இது சமுதாயத்தின் அனைத்துப் பிரிவு மக்களாலும் பயன்படுத்தக்கூடிய மலிவான போக்குவரத்து ஆகும்.

8) மனித வள மேம்பாடு என்றால் என்ன?

**பதில் : மனித வள மேம்பாடு:** மனித வள மேம்பாடு என்பது கல்வி, உடல்நலம், அதிகாரம் போன்றவைகளில் மக்களுக்கான வாய்ப்புகளை அதிகப்படுத்தும் ஒரு செயல் முறையாகும்.

9) பல்தரப்பு வணிகம் நடைபெறும் முக்கிய வணிகத் தொகுதிகளைக் கண்டறிக.

**பதில் :** 1) பல நாடுகளுக்குக்கிடையே நடைபெறும் வணிகள் பல்கிளை வணிகம் எனப்படும்.
2) இவ்வணிகத்தை எளிதாக நடைமுறைப்படுத்திட APEC, ASEAN மற்றும் SAPTA போன்ற வணிக கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.
3) இதன் மூலம் வணிகம் எளிதாக நடைபெறுகிறது.
4) இம்முறை சிக்கல் ஆனதாக இருந்தாலும் வணிகத்தில் ஈடுபடும் அனைத்து நாடுகளும் வணிக ஒப்பந்தத்தில் கையொப்பமிடும்போது ஒரு சிறந்த வணிகமாக நிலை பெறுகிறது.

10) மக்கள் தொகை என்றால் என்ன?

**பதில் :** ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் ஒரு நாட்டில் வசிக்கின்ற மொத்த மக்களின் எண்ணிக்கையே ஒரு நாட்டின் மக்கள் தொகை என்று அழைக்கப்படுகிறது.

11) மக்கள் தொகைக் கலவை என்றால் என்ன?

**பதில் :** மக்கள் தொகைக் கலவை என்பது பல்வேறு பண்புகளான வயது பாலினம் திருமண நிலை சாதி மதம், மொழி, கல்வி தொழில் போன்றவற்றை உள்ளடக்கியது.

12) மக்கள் தொகை மாற்றம் என்றால் என்ன?

**பதில் :** மக்கள்தொகை மாற்றம் என்பது ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியிலிருந்து மற்றொரு காலப்பகுதிக்கு இடைப்பட்ட காலத்தில் மக்கள் தொகை அதிகரிப்பதையே அல்லது குறைவதையோ குறிப்பிடுவதாகும்.

13) வயதுக் கலவை என்றால் என்ன?

**பதில் :** வயது கலவை என்பது ஒரு நாட்டின் மக்கள் தொகையில் உள்ள பல்வேறு வயது பிரிவினர் எண்ணிக்கையை குறிக்கிறது.

14) இந்திய சாலைகளின் வகைகளை எழுதுக.

**பதில் :** 1) தேசிய நெடுஞ்சாலைகள் (NH)
2) மாநில நெடுஞ்சாலைகள்
3) மாவட்டச் சாலைகள்
4) ஊரகப்பகுதி சாலைகள்
5) எல்லைப்புறச்ச சாலைகள்
6) பன்னாட்டு நெடுஞ்சாலைகள்

15) மக்கள் தொகைக் கலவை என்றால் என்ன? இதனைக் கற்பதால் கிடைக்கும் பயன் என்ன?

**பதில் :** 1. மக்கள் தொகைக் கலவை என்பது பல்வேறு பண்புகளான வயது, பாலினம், திருமணநிலை, சாதி, மதம், மொழி, கல்வி, தொழில் போன்றவற்றை உள்ளடக்கியது ஆகும்.
2. மக்கள் தொகை கலவை பற்றிக் கற்பது சமூக, பொருளாதார மற்றும் மக்கள் தொகையின் அமைப்பை அறிய உதவுகிறது.

**5 மதிப்பெண் வினாக்கள்** 4 x 5 = 20

16) நகரமயமாக்கம் என்றால் என்ன? அதன் சிக்கல்கள் யாவை?

**பதில் : நகரமயமாக்கம்**
1. கிராமப்புற சமுதாயம் நகர்ப்புற சமுதாயமாக மாற்றமடைவதேயே நகரமயமாக்கம் என்கிறோம்.
2. நகர்புற மக்கள் தொகை சதவிகிதத்தின் அடிப்படையிலேயே நகரமயமாக்கம் அளவிடப்படுகிறது.
**நகரமயமாக்கலால் ஏற்படும் சிக்கல்கள்:**
1. நகர விரிவாக்கத்தை ஏற்படுத்துகிறது.
2. நகர்ப்புறங்களில் மக்கள் நெருக்கடியைத் தோற்றுவிக்கிறது.
3. நகர்ப்புறங்களில் குடியிருப்புகளின் பற்றாக்குறையை உருவாக்குகிறது.
4. குடிசைப் பகுதிகள் தோன்றக் காரணமாக உள்ளது.
5. போக்குவரத்து நெரிசலை அதிகப்படுத்துகிறது.
6. குடிநீர் பற்றாக்குறையை ஏற்படுத்துகிறது.
7. வடிகால் பிரச்சனைகள் உண்டாகின்றன.
8. திடக்கழிவு மேலாண்மையை சிக்கலாக்குகிறது.
9. குற்றங்கள் அதிகரிக்கக் காரணமாகின்றன.

17) இந்தியாவில் செயற்கைக்கோள் தகவல் தொடர்பின் முக்கியத்துவத்தை விளக்குக

**பதில் : இந்தியாவில் செயற்கைக்கோள் தகவல் தொடர்பின் முக்கியத்துவம்:**
1. செயற்கை கோளானது தொடர்ச்சியாக மிகப்பெரும் பரப்பிலான பதிமம் மற்றும் தகவல்களை அளிப்பதன் மூலம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தகவல் தொடர்பு சாதனமாக இந்தியாவில் விளங்குகிறது.
2. செயற்கைக்கோள் பதிமங்களைப் பயன்படுத்தி, வானிலை ஆய்வு, வானிலை முன் அறிவிப்பு இயற்கைப் பேரழிவு கண்காணிப்பு போன்ற முக்கியப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.
3. 1969 ஆம் ஆண்டு இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் நிறுவப்பட்ட பின்னர், தொலைத்தொடர்பு பரிமாற்றத்தில் செயற்கைக் கோள்கள் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியுள்ளன.
4. இந்திய செயற்கைக்கோள் தகவல் தொடர்பு அமைப்பு இரண்டு பிரிவுகளைக் கொண்டது.
அ) இந்திய செயற்கைக்கோள் அமைப்பு (INSAT)
ஆ) இந்திய தொலையுணர்வு செயற்கைக்கோள் அமைப்பு (IRS)
5. 1983 இல் நிறுவப்பட்ட இந்திய தேசிய செயற்கைக்கோள் அமைப்பு, தொலைத்தொடர்பு, வாளியல் ஆய்வு மற்றும் பல்வேறு திட்டங்களை உள்ளடக்கிய ஒரு பல்நோக்கு திட்ட அமைப்பாக உள்ளது.
6. இன்சாட் வரிசை செயற்கைக் கோள்கள், கைபேசி, தொலைபேசி, வானொலி மற்றும் தொலைக்காட்சிகளுக்கு சமிக்கைகளை அனுப்ப பயன்படுகிறது. மேலும் இது வானிலையைக் கண்டறியவும், ராணுவப் பயன்பாட்டிற்கும் பயன்படுத்தப்படுகிறது.
7. 1983 ஆம் ஆண்டு ஏவப்பட்ட இன்சாட் 18 தகவல் தொடர்பிற்காக ஏவப்பட்ட முதல் இன்சாட் வரிசை செயற்கைக்கோளாகும்.
8. 2018 ஆம் ஆண்டு ஏவப்பட்ட ஜி-சாட் 7A தகவல் தொடர்புக்காக ஏவப்பட்ட சமீபத்திய செயற்கைக்கோளாகும்.

18) இந்தியாவின் சாலைகளை வகைப்படுத்தி விளக்குக.

**பதில் : சாலைகளின் வகைகள்:**

1. தேசிய நெடுஞ்சாலைகள்
2. மாநில நெடுஞ்சாலைகள்
3. மாவட்டச் சாலைகள்
4. கிராமச் சாலைகள்
5. எல்லைப்புறச் சரலைகள்
6. தங்க நாற்கரச் சாலைகள்

**தேசிய நெடுஞ்சாலைகள்**

1. தேசிய நெடுஞ்சாலைகள் இந்திய சாலைப் போக்குவரத்தின் மிக முக்கிய அமைப்பாகும். இது நாட்டின் எல்லைகள், மாநிலத் தலைநகரங்கள், முக்கியத் துறைமுகங்கள் இரயில் நிலையங்கள், முக்கிய சுற்றுலா மையங்கள் ஆகியவற்றை இணைக்கின்றன.
2. இச்சாலைகளை மேம்படுத்துவதற்கும் பராமரிப்பதற்கும் இந்திய அரசின் தரைவழி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம் பொறுப்பாகும்.
3. இந்தியாவில் மிக நீளமான தேசிய நெடுஞ்சாலை NH4 ஆகும். இது உத்திரப் பிரதேசத்தில் உள்ள வாரணாசியிலிருந்து தமிழ்நாட்டில் உள்ள கன்னியாகுமரி வரை 2369 கி.மீ நீளத்தைக் கொண்டதாகும்.
4. குறைவான நீளமுடைய தேசிய நெடுஞ்சாலை NH47 A ஆகும். இது எர்ணாகுளத்திலிருந்து 6 கி.மீ தொலைவைக் கொண்ட கொச்சின் துறைமுகத்தை இணைக்கிறது.

**மாநில நெடுஞ்சாலைகள்:**

1. மாநில நெடுஞ்சாலைகள் பொதுவாக மாநிலத்திலுள்ள முக்கிய மாநகரங்கள், நகரங்கள் மற்றும் மாவட்டத் தலைநகரங்களை, மாநில தலை நகரத்துடனும் தேசிய நெடுஞ்சாலைகளுடனும், அண்டை மாநில நெடுஞ்சாலைகளுடனும் இணைக்கின்றன.
2. இந்த மாநில நெடுஞ்சாலைகள் மாநில பொதுப்பணித்துறையினால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.

**மாவட்டச் சாலைகள்:**

1. மாவட்ட சாலைகளானது மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளுடன் மாவட்ட மற்றும் வட்டார தலைமை இடங்களை இணைக்கிறது.
2. மாவட்ட சாலைகள் மாநிலத்தின் பொதுப்பணித்துறையால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.

கிராமச்சாலைகள்:

1. கிராமச் சாலைகள் கிராமப்புறங்களை இணைப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன.
2. இவை பல்வேறு கிராமங்களை அருகில் உள்ள நகரங்களுடன் இணைக்கின்றன. இவைகளை கிராமப் பஞ்சாயத்துக்கள் பராமரிக்கின்றன.

**எல்லைப்புறச்சாலைகள்:**

1. எல்லைப்புறச் சாலைகள் நாட்டின் எல்லைகளில் அமைந்துள்ள முக்கியத்துவம் வாய்ந்த சாலைகளாகும்.
2. இவைகள் எல்லைப்புற சாலைகள் நிறுவனத்தால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.
3. இவ்வமைப்பு 1960இல் நிறுவப்பட்டது.
4. இச்சாலைகள் வடக்கு மற்றும் வடகிழக்கு எல்லைப் பகுதிகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.
5. எல்லைப்புறச் சாலை நிறுவனத்தால் உலகிலேயே உயரமான (4270 மீ) எல்லைப்புற சாலை லடாக்கிலுள்ளலேவிலிருந்து சண்டிகர் வரை அமைக்கப்பட்டுள்ளது.

**தங்க நாற்கரச்சாலை:**

5846 கி.மீ நீளத்தையும் 4 முதல் 6 வழிகளைக் கொண்டதாகவும் உள்ளது. இது வடக்கு தெற்காக இந்தியாவின் நான்கு பெரு நகரங்களான புதுடெல்லி-கொல்கத்தா-சென்னை-மும்பை-புதுடெல்லி ஆகியவைகளை இணைக்கிறது. இத்திட்டம் 1999 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. **வட -தென் மற்றும் கிழக்கு-மேற்கு பகுதிகளை இணைக்கும் சாலைகள் :** வடதென் பகுதி இணைக்கும் சாலைகளின் நோக்கம் ஜம்மு காஷ்மீரில் உள்ள ஸ்ரீநகரையும் கன்னியாகுமரியையும் இணைப்பதாகும் கிழக்கு மேற்கு பகுதி இணைக்கும் வகையில் குஜராத் போர்பந்தரையும் அசாம் மாநிலத்தில் சில்சரையும் இணைப்பதாகும். **விரைவுச் சாலை :** நன்கு மேம்படுத்தப்பட்ட தரமான பல்வழிப் பாதைகளை கொண்ட அதிவேக போக்குவரத்திற்கான சாலைகள் ஆகும். எ.கா: மும்பை - பூனா விரைவுச்சாலை

**பன்னாட்டு நெடுஞ்சாலை:** இந்தியா தனது அண்டை நாடுகளுடன் இணைக்கமான உறவை மேம்படுத்தும் நோக்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன சாலை பன்னாட்டு நெடுஞ்சாலைகள் ஆகும்.

19) அதிக மக்கள் தொகையால் ஏற்படும் பிரச்சனைகள் யாவை?

**பதில் :** 1. இந்திய நாட்டில் அதிகரித்துவரும் மக்கள் தொகையானது சமூகம், பொருளாதாரம், கலாச்சாரம், அரசியல் மற்றும் கற்றுச்சூழலில் பெரும் சவால்களை ஏற்படுத்துகின்றது.

2. மக்கள் தொகை பிரச்சனையானது இடம் மற்றும் காலத்திற்கு ஏற்ப மாறுபடுகிறது.

3. மக்கள் தொகை அதிகரிப்பால் ஏற்படும் பிரச்சனைகள்:

4. மக்கள் நெருக்கடி

5. இட நெருக்கடி

6. வேலைவாய்ப்பின்மை

7. திறனுக்கேற்ற வேலையின்மை

8. குறைந்த வாழ்க்கைத்தரம்

9. ஊட்டச்சத்து இன்மை

10. இயற்கை மற்றும் வேளாண் நிலங்களைத் தவறாக நிர்வகித்தல்

11. ஆரோக்கியமற்ற சூழல் போன்ற பிரச்சனைகள் ஏற்படுகின்றன.